**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) |
| | : | Prosecution - **PW-7** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : தினேஷ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 12th day of December 2023.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வந்து, வெல்டிங் வேலை செய்கிறேன். கடந்த 18.09.2020 அன்று காலை 9.05 மணியளவில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி மனைவி சஸ்மிதா என்பவர் எனக்கு போன் செய்து, அவர் கணவரை வெட்டி விட்டனர் என கூறினார். நான் சுமார் 3 நிமிடத்தில் கோவை ரோடு, டேன்சி எதிர்புறம் உள்ள இளநீர்கடைக்கு சென்றேன். அங்கு சஸ்மிதா அழுதுக்கொண்டிருந்தார். இளநீர்கடையில் கிருஷ்ணமூர்த்தி கை மற்றும் தலையில் வெட்டுப்பட்டு கீழே கிடந்தார். பின்னர் இரண்டு நிமிடத்தில் ஆம்புலன்ஸ் அங்கு வந்தது. நான் கிருஷ்ணமூர்த்தியை ஆம்புலன்சில் ஏற்றி, பக்கத்தில் இருந்த அப்பல்லோ மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அப்பல்லோ மருத்துவமனையில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியை நானும், சஸ்மிதாவும் அனுமதித்தோம். மருத்துவமனைக்கு சென்றபோது, என்ன நடந்தது என்று சஸ்மிதா என்னிடம் சொன்னார். மருத்துவமனையில் கிருஷ்ணமூர்த்தியை அனுமதித்தபோது, மருத்துவரிடம் என்ன நடந்தது என்ற விவரத்தை நான் தெரிவித்தேன். அதன் பின்னர், மருத்துவமனைக்கு வெளியே வைத்து யார் வெட்டினார்கள் என்று சஸ்மிதா சொன்னார். பின்னர் 10.50 மணிக்கு கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார் என மருத்துவர் கூறினார். இது சம்மந்தமாக போலீசார் என்னை இருமுறை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை</u>**

நான் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் வீட்டிற்கு நான்கு வீடுகள் தள்ளி வசித்து வருகிறேன். அவர் என் உறவினர் இல்லை. பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர். என் சாதியை சேர்ந்தவர். நான் ஆம்புலன்ஸ் டிரைவராக வேலை பார்க்கவில்லை. போலீசாரிடம் என்னுடைய செல்போன் எண்ணை கொடுத்தேன். நான் தனியாக போன் மூலம் அழைக்கும் நபர்களுக்கு வெல்டிங் வேலை செய்து கொடுப்பேன். தனியாக கடை வைக்கவில்லை. நாங்கள் அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்ற இரண்டு நிமிடத்தில் போலீசார் அங்கு வந்தனர். நான் அப்போது மருத்துவமனைக்கு உள்ளே இருந்தேன். அதன்பிறகு போலீசார் வந்ததை பார்த்தேன். போலீசார் அங்கு என்னிடம் என்ன நடந்தது என்ற விவரத்தை கேட்டனர். நான் போலீசாரிடம் என்ன நடந்தது என்று சொன்னேன். அதை போலீசார் எழுதிக்கொண்டனர். அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினரா என்றால் வாங்கினார்கள். கிருஷ்ணமூர்த்தியின் இறப்புச்சான்றிதழை என்னிடம் கொடுத்தார்களா என்றால் அவரது வீட்டில் உள்ளவர்களிடம் கொடுத்தார்கள். கிருஷ்ணமூர்த்தியின் இறப்புச்சான்றிதழை என்னிடம் மருத்துவமனையில் கொடுத்தார்கள் என்றும், தற்போது நீதிமன்றத்தில் அவரது வீட்டில் உள்ளவர்களிடம் கொடுத்தார்கள் என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சம்பவத்தின்போது நான்தான் கிருஷ்ணமூர்த்தியுடன் இருந்தேன் என்றும், அவருடன் என்னை தவிர வேறு யாரும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தியை அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வெட்டினார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அதன்பிறகு கிருஷ்ணமூர்த்தியை நான் மட்டும் மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என்னிடம் வழக்கு சம்மந்தமாக புகார் வாங்கிய பிறகுதான், கிருஷ்ணமூர்த்தியின் அண்ணன், தம்பி, மனைவி மற்றும் உறவினர்கள் மருத்துவமனைக்கு வந்தனர் என்றால் சரியல்ல. நான் அதை மறைத்துவிட்டு, கிருஷ்ணமூர்த்தியின் மனைவி போன் செய்து, நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், கிருஷ்ணமூர்த்தியின் மனைவியும் மருத்துவமனைக்கு கிருஷ்ணமூர்த்தியை கொண்டு சென்றோம் என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தியின் மனைவி சம்பவ இடத்திலேயே கிடையாது என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

போலீசார் என்னை 18.09.2020 அன்றே இருமுறை விசாரித்தனர். என்னை எந்த காவல் அதிகாரி விசாரித்தார் என்று ஞாபகமில்லை. போலீசார் தாக்கல் செய்த வழக்கிற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.